சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில்

23 சார்புஅணிகளுடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துரையாடல்!

தேர்தலில் சிறப்பாக பணியாற்ற வேண்டுகோள்!

சிவகங்கை, ஜூன் 20-

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் 17ஆம் தேதி அன்று துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சுற்றுப்பயணம் செய்து பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். அதன் தொடர்ச்சியாக திருப்பத்தூரில் தனியார் மஹாலில் கழகத்தில் உள்ள 23 சார்பு அணிகள் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்களுடன் கலந்துரையாடினார்.

இந்த கூட்டத்திற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை வகித்தார். இந்த கூட்டத்தில் துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் பேசியதாவது . கழகத்தில் உள்ள அனைத்து அணிகளும் ஒன்றாக இணைந்து 2026 சட்டமன்ற தேர்தலில் சிறப்பாக பணியாற்ற வேண்டும் .இம்முறை நடைபெறும் தேர்தலில் புதிய வரலாறு படைக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார் . அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு அணியினருடன் குழுவாக புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.

எல். ஏ. மாவட்டக் கழக துணை செயலாளர்கள் த. சேங்கை மாறன், திருமதி ஜோன்ஸ் ருசோ,மாவட்ட அவை தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன்மாநில இளைஞரணி துணை செயலாளர்கள் ஜி.பி.ராஜா ,இன்பாரகு,ஆகியோர் கலந்து கொண்டார்கள். அணிகளின் சார்பில் மாவட்ட இளைஞரணி அணிப்பாளர் நாகனி செந்தில்குமார் துணை அமைப்பாளர்கள் ஆர். சேதுபதி ராஜா, கிங் கார்த்தி, எஸ் .எம் .மதிவாணன் பரணி கிட்டு ,மகாதீர் ,கே. எம் .பொற்கோ, மாவட்டசுற்றுப்புற சூழல் அணி அமைப்பாளர் எஸ். எஸ்.ஏ. வல்லபாய், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் சுப. சண்முகநாதன், மாவட்ட விவசாய்அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.அருணாசலம், மாவட்ட நெசவாளரணி அமைப்பாளர் எம். முருகானந்தம், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி ராஜபாண்டி,

மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில் மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் எஸ். பாஸ்கர் மாவட்ட சிறுபான்மை நல அமைப்பாளர் என்.எம். சாக்ளா, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே .எஸ். நாராயணன், மாவட்ட கலை இலக்கிய பேரவை தலைவர் தி .திருநாவுக்கரசு, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் தலைவர் கொத்தமங்கலம் சேது சிங் கமுத்து, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் சசிவர்ணம், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் சன் சீமான் சுப்பையா , மாவட்ட வர்த்தக அணி ருக்மா சரவணன், மாவட்ட செய்திதொடர்பாளர் அ.அயூப் கான், மாவட்ட பொறியாளர் அனி சிக்கந்தர் பாதுஷா, உட்பட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டார்கள்.

துறையூர் சாரல் விளையாட்டுக்கழகம் - மானூர் கிழக்கு ஒன்றியக் கழகம் இணைந்து நடத்திய

மாநில அளவிலான மாபெரும் மின்னொளி கைப்பந்துப் போட்டி!

அமைச்சர்கள் கே.என்.நேரு- அனிதா ராதாகிருஷ்ணன் பரிசு வழங்கினர்!

நெல்லை, ஜூன் 20-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நெல்லை மத்திய மாவட்ட மானூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க மற்றும் துறையூர் சாரல் விளையாட்டு கழகம் இணைந்து நடத்தும் மாநில அளவிலான மாபெரும் மின்னொளி கைப்பந்து போட்டி 14.06.25,15.06.25 ஆகிய (சனிஞாயிறு) தேதியில் துறையூர் சாரல் மைதானத்தில் மானூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் சூ. அருள்மணி ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசு கோப்பை வழங்கும் நிகழ்வு நெல்லை மத்திய மாவட்ட கழக அலுவலகத்தில் மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்று வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசு கோப்பை வழங்கினர்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசு வழங்கும் விழா,

17.06.2025 செவ்வாய் கிழமை அன்று நெல்லை மத்திய மாவட்ட கழக அலுவலகத்தில் மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.

மாநில அளவிலான போட்டியில் வென்ற நான்கு அணிகளுக்கு கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, கிராமங்களுக்கு இடையே நடைபெற்ற போட்டியில் வென்ற நான்கு அணிகளுக்கு,மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் ஆகியோர் கேடயங்களை வழங்கினர்.

நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், மாநில சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு தலைவர் மைதீன் கான், மாநில வர்த்தக அணி மாநில இணைச் செயலாளர் மாலை ராஜா, மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள், மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் பேச்சிப் பாண்டியன், லெட்சுமணன்,

மாவட்ட அவைத் தலைவர் முருகன், மாநகராட்சி மேயர் கோ.ராம கிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர்.ராஜு,மாவட்ட துணைச் செயலாளர்கள் சுரேஷ், தர்மன்,கிரிஜா குமார்,முன்னாள் மாவட்ட கழக துணைச் செயலாளர் ஆ.க.மணி,மாநகர செயலாளர்கள் கிழக்கு தினேஷ், மேற்கு சு.சுப்பிர மணியன், மாநகர துணை செயலாளர் அப்துல் கய்யூம்,பிரபு பாண்டியன்,சுதா மூர்த்தி,மாநகர பொருளாளர் பூக்கடை அண்ணாதுரை, பகுதி கழக செயலாளர்கள் சுப்பிர மணியன்,சையது முகைதீன், அண்டன் செல்லத்துரை, நமச்சிவாயம் என்ற கோபி,சங்கர்,துபாய் சாகுல் ஹமீது, சாமுவேல்,மண்டல தலைவர்வர்கள் மகேஸ்வரி, கதீஜா இக்லாம் பாசிலா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வில்சன் மணித்துரை உள்பட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள்,கழக உடன்பிறப்புகள் திரளாக கலந்து கொண்டனர்.

மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் நெல்லை மத்திய மாவட்டத்தில்

'ஓரணியில் தமிழ்நாடு' கழகத்தில் உறுப்பினர் சேர்க்கை!

அமைச்சர்கள் கே.என். நேரு - அனிதா ராதாகிருஷ்ணன் துவக்கி வைத்தனர்!

நெல்லை, ஜூன் 20-

நெல்லை மத்திய மாவட்ட கழக அலுவலகத்தில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.ஏற்பாட்டில் "ஓரணியில் தமிழ்நாடு" என்ற தலைப்பில் தமிழக மக்களை கழகத்தில் உறுப்பினராக ஒன்றிணைக்க உறுப்பினர் சேர்க்கையை

கழக அமைப்புச் செயலாளர் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வில் மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்

அனிதா ஆர் ராதாகிருஷ்ணன் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன்,முன்னாள் அமைச்சர் மைதீன்கான் ஆகியோர் பங்கேற்றனர்.

மதுரையில் ஜூன் 1 ம் தேதி நடைபெற்ற கழக பொதுக்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க "ஓரணியில் தமிழ்நாடு" என்ற தலைப்பில் தமிழக மக்களை கழகத்தில் ஒருங்கிணைக்க புதிய உறுப்பினர்கள் சேர்க்கையை தீவிர படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

அதன்படி நெல்லை மத்திய மாவட்டதி.மு.க.அலுவலகத்தில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கை படிவத்தை கழக நிர்வாகளிடம் வழங்கும் நிகழ்வு நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு

பங்கேற்று கழக நிர்வாகிகளிடம் வழங்கினார்.

நிகழ்வில் மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன், மாநகராட்சி மேயர் இராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜ், மாநில சிறுபான்மை நல உரிமைப் பிரிவு தலைவர் முன்னாள் அமைச்சர் மைதீன் கான்,நெல்லை மாநகர பொறுப்பாளர்கள் சு.சுப்பிரமணியன்(மேற்கு) ஏ.எல்.பி. தினேஷ் (கிழக்கு) மாவட்ட அவை தலைவர் முருகன்,மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலை ராஜா, மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள்,தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஏ.எல்.எஸ்.லெட்சுமணன், பேச்சிபாண்டியன், சித்திக்,பொதுக்குழு உறுப்பினர்கள் முன்னாள் மேயர் சரவணன்,பரமசிவஐயப்பன்,நடராஜன்,

மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த், மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்,தர்மன், கிரிஜா குமார்,மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம்,பிரபு பாண்டியன்,சுதா மூர்த்தி,மாநகர பொருளாளர் பூக்கடை அண்ணாதுரை, பகுதிச் செயலாளர்கள் சுப்பிர மணியன்,துபைசாகுல், நமச்சிவாயம்,சங்கர்,டாக்டர் சங்கர், செய்யது முகைதீன், சாமுவேல்,அண்டன் செல்லத்துரை,ஒன்றிய செயலாளர்கள் அருள்மணி, அன்பழகன், மாரியப்பன், மண்டல தலைவர்கள் மகேஸ்வரி, கதீஜா இக்லாம் பாசிலா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வில்சன் மணித்துரை, துணை அமைப்பாளர் மீரான் மைதீன், தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் காசிமணி, நெல்லை கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வ சூடாமணி, மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன்,மாமன்ற உறுப்பினர்கள் கந்தன்,உலகநாதன்,ரம்சான் அலி, ஜெகநாதன், கோகுலவாணி சுரேஷ்,

சின்னத்தாய் கிருஷ்ணன்,அனார்கலி, அப்துல் சுபகாண, அலி சேக் மன்சூர்,சபி அமீர் பாத்,சகாய ஜூலியட் மேரி மற்றும் அனிதா, செல்வலட்சுமி அமிதாப், அந்தோணி,சேக் உஸ்மானி,ஆவின் கல்யாணி,பேபி கோபால், மேகை செல்வம்,உஸ்மான் துரையரசன்,குணா, ராவணன்,சாய்பாபா,எல்ஐசி பேச்சிமுத்து, உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

இதேபோல் நெல்லை மேற்கு மாநகரத்தில் உள்ள நெல்லை பேட்டை கிழக்கு, மேற்கு,தச்சநல்லூர் வடக்கு பகுதியில் 28 வார்டுகளிலும் பூத் வாரியாக சென்று உறுப்பினர் சேர்க்கை பணியில் ஈடுபடுவதற்கான கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு விடம் நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன், கிழக்கு மாநகர பொறுப்பாளர் தினேஷ் ஆகியோர் உறுப்பினர் படிவங்களை பெற்றுக் கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து நெல்லை மத்திய மாவட்ட நிர்வாகிகள்,மாநகர மேற்கு, கிழக்கு,நிர்வாகிகள் புதிய உறுப்பினர் சேர்க்கும் பணியில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கி விட்டனர்.

பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட போகலூர் மேற்கு ஒன்றியம் வணங்கானேந்தல் வழியாக பூவிளத்தூர் வரை சுமார் 3 கிலோ மீட்டருக்கு முதலமைச்சர் கிராம சாலை திட்டத்தின் கீழ் ரூபாய் 94 லட்சம் மதிப்பீட்டில் சாலை அமைப்பதற்கு பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் திட்டப்பணிகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் போகலூர் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் வழக்கறிஞர் குணசேகரன், பூவிளத்தூர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ராமமூர்த்தி, ஒப்பந்தக்காரர் ராமசாமி மற்றும் கிளைக் கழகச் செயலாளர்கள் பிரதிநிதிகள் கிராம பொதுமக்கள் என ஏராளமானோர் இருந்தனர்.

இளைஞர்களை ஒன்றிணைத்து வெல்வோம்!

இந்தியத் திருநாட்டின் ஈடு, இணையற்ற ஜனநாயகப் பேரியக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இன்றையத் தலைவர், திராவிடப் பேரரசர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியவர்கள் ஜூன் மாதம் 1ந்தேதி மதுரை மாநகரில் நடைபெற்ற கழகத்தின் 102 வது பொதுக்குழுவில் அறிவித்த பல திட்டங்களில், குறிக்கோள்களில், இலட்சியங்களில் தமிழர்க்கு அரணாம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தமிழ்நாடு வாக்காளர்களில் 30 சதவீதம் பேர் கழகத்தின் உறுப்பினர்களாக்கப் படவேண்டும் என்ற உணர்வுபூர்வமான அறிவிப்பினை செயல்படுத்த துவங்கும் நாள் இந்த ஜூன் மாதம் 20 அன்று தமிழகமெங்குமுள்ள கழகத் தளகர்த்தர்களால் ஆரம்பிக்கப்பட உள்ளது.

வரலாற்றைத் திரும்பிப்பார்த்தால், தந்தை பெரியாரின் கொள்கை மாறுபாடுகளில் வேறுபாடு கண்ட அறிஞர் அண்ணா அவர்களைத் தொடர்ந்து அவர்தம் தம்பியர் தவித்திட்டிருந்த நிலையில் 1949 செப்டம்பர் 3 தேதியிட்ட மாலைமணியில் புதிய அறிவிப்பு வெளியானது.

திராவிட கழகத் தோழர்களின் எதிர்கால செயல்திட்ட அமைப்புக்கான ஆலோசனைக் கூட்டம் 17 செப்டம்பர் 1949 அன்று சென்னை பவழக்காரத்தெரு ஏழாம் எண் இல்லத்தில் நடைபெறும் என பேரறிஞர் அண்ணா அவர்கள் அறிவித்தார்.

அண்ணாவின் தம்பியரிடையே மகிழ்ச்சி பரவியது. திராவிடக் கழகத்தின் மத்திய நிர்வாகக்குழு குடந்தை கே. கே. நீலமேகம் தலைமையில் கூடியது.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட பல முக்கிய முடிவுகளில் புதிதாக அமைப்புக்குழு உருவாக்கப்பட்டு தலைவராக கே. கே நீலமேகமும், என். வி. நடராசன் செயலாளராகவும் நியமிக்கப்பட்டனர். மறுநாள் (18 செப்டம்பர் 1949) அமைப்புக்குழு கூடி விவாதித்து சில முடிவுகளை எடுத்தனர்.

நாம் இதுவரையில் பரப்பிவந்த கொள்கைகளையும், தொடர்ந்து பரப்பவும், உடனடியாக வேலைகளைத் தொடங்கி நடத்தவும் நாம், " திராவிட முன்னேற்றக் கழகம் " என்ற அமைப்பை ஏற்படுத்திக் கொண்டு செயலாற்றுவதென அமைப்புக்குழு தீர்மானித்தது.

புதிய கழகத்தின் பொதுச்செயலாளராக அண்ணா அவர்கள் இருந்து வழிநடத்த வேண்டும் என்று அந்த அமைப்புக்குழு கேட்டுக் கொண்டது. இதோடு 110 பேர் கொண்ட பொதுக்குழு, பிரச்சாரக்குழு, அமைப்புக்குழு, நிதிக்குழு ஆகியவை உருவாக்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயர் சட்டென்று முடிவெடுத்து அறிவிக்கப்பட்ட பெயர் அல்ல.

தனது ஆதரவாளர்கள், முக்கிய தலைவர்கள் பலருடனும் ஆலோசனை செய்து, அண்ணா அவர்கள் தேர்ந்தெடுத்தப் பெயர் தான் திராவிட முன்னேற்றக் கழகம்.

முன்னதாக, தமிழ்நாடு சோஷலிஸ்ட் கட்சி, திராவிட சோஷலிஸ்ட் கழகம், திராவிட சமதர்மக் கழகம், திராவிட சமுதாயக் கழகம், திராவிட தீவிரவாதிகள் கழகம் என பல பெயர்கள் பரிசீலிக்கப்பட்டு, இறுதியில் Dravidan Progressive Federation என்று அர்த்தம் வரும் வகையில் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயர் உறுதியானது.

புதிய கட்சி தொடங்கப்பட்டு விட்டது. இந்த செய்தியை தொண்டர்களுக்கும், பொதுமக்களுக்கும் சொல்லவேண்டும் எனில் பொதுக்கூட்டம் போட்டு முறைப்படி அறிவிக்க வேண்டும் என்று முடிவானது.

சென்னை ராயபுரத்தில் இருக்கும் ராபின்சன் பூங்கா அத்தகு வரலாற்றுப் பெருமையை தனக்கு சூடிக்கொண்டது.

இப்படி கண்ணீர்த்துளிகள் என்று தந்தை பெரியார் அவர்களால் கடுஞ்சொற்கள் கொண்டு விமர்ச்சிக்கப்பட்ட இயக்கம்தான் இன்று அண்ணல் யானை, அணிதேர்ப்புரவி, ஆட்பெரும் படையோடு மன்னாதி மன்னர்களை கொள்கைவழி வீழ்த்தி திராவிடப் பெருவேந்தர் தளபதியவர்களின் தலைமையில் கம்பீரமாய் காட்சி தருகிறது.

இன்று எத்தனை, எத்தனை பரிணாம வளர்ச்சி! தகவல் தொழில்நுட்ப பெருவளர்ச்சி கழகத்தின் கொள்கைகளை கனப்பொழுத்தில் கடைசித் தொண்டனையும் சென்று சேர்ந்தடைகிறது!

ஆரம்பத்தில் தேர்தலே இல்லையென துவக்கப்பட்ட இயக்கத்தை ஒரு பக்கம் பெரியார், இன்னொரு புறம் காங்கிரஸ், பெரும் பணக்காரர், ஜமீன் நிலச்சுவான்தார்கள், ஆலைமுதலாளிகள் இவர்களைக் கடந்து இயக்கத்தை வளர்க்க, அண்ணா, தலைவர் கலைஞர், நாவலர், என் வி. என், மதியழகன் இன்னும் இன்னும் எத்தனை தலைவர்கள் சிந்திய வியர்வை போற்று தலுக்குரியது. இதற்கு கலைத்துறையும் கை கொடுத்தது.

அண்ணா, கலைஞர் போன்றோரின் எழுத்தும், பேச்சும், கலைத்துறைப்பணியும், சமூகத்திலே, படித்திட்ட மற்றும் பாமர நடுத்தட்டு மக்களிடையே ஏற்படுத்திய மாற்றம் ஒரு சமூக புரட்சி என்றே சொல்லலாம்.

புதிதாக ஒரு இளைஞர் திமுக உறுப்பினரென்றால், நிச்சயம் அவர் தந்தை ஒரு காங்கிரஸ்காரராகவோ, அல்லது ஆன்மீகத்தில் பழுத்த பண்பினராகத் இருந்திருப்பார்.

கடவுள் இல்லை என்னும் கட்சி! தேசிய உணர்விற்கு எதிரான கட்சி! உருப்படாதோர் கட்சி என்றுதான் ஆரம்பத்தில் நமது இயக்கம் அடிபட்டு, வதைப்பட்டு வளர்ந்தது.

ஒருவர் ஊரில் செல்வாக்கு மிகுந்தவராக இருப்பார். பெரும் செல்லந்தாரகவும் இருப்பார். திமுகவிற்கு, இயக்கவளர்ச்சிக்கு நிதியுதவி செய்துமிருப்பார். ஆனால் திமுக உறுப்பினராக இல்லாமல் திமுக அனுதாபி என்ற அடைமொழியோடு வலம் வருவார்.

இன்றைக்கு இரண்டு கோடி உறுப்பினர்களைக் கொண்ட மகத்தான ஜனநாயகப் பேரியக்கமாம் கழகத்திற்கு ஆரம்பத்தில் உறுப்பினர் பலம் சில ஆயிரங்களைக் கடந்தாலே, கழக ஏடுகள் திராவிடநாடும், முரசொலியும், நம்நாடும் பார்த்தீர்களா! பார்த்தீர்களா! " உடுப்பணியா இராணுவ துருப்புக்களாக அண்ணாவின் தம்பியர் 5000 பேர் திமுகவின் உறுப்பினராகிப் பெருமை கொள்கின்றனர் என்று எழுதிப் புளகாங்கிதம் அடைந்தன.

1961 ல் கழகத்தில் கலகம் விளைவித்த கும்பலின் செயலால் புண்பட்ட அண்ணாவின் வெண்பட்டு இதயத்திற்கு இதமாகவும், கவலைதோய்ந்த தலைவர் கலைஞரின் சிந்தைக்கும் மொத்தத்தில் கலக்கிக் கிடந்த கழகத்தவர் அனைவரும் தெளிவும், பொலிவும், வலிவும் பெற்றிடும் வண்ணம் 21.6.1961 தேதியிட்ட முரசொலியில் மாமேதை மாறன் அவர்கள், " காஞ்சியில் நடந்த கலந்துரையாடல்!" என்று தீட்டிய தலையங்கத்தில் இயக்க வளர்ச்சி, புதுக் கட்சியின் தளர்ச்சி (தமிழ் தேசிய கட்சி) இவற்றைப் பதிவு செய்து, கழகத்திலிருந்து பிரிந்து சென்றவர் 411 பேர்.

அவர்களது விலகலுக்குப்பின் கழகத்தின் உறுப்பினர்களாக இருப்போர் 8706 பேர் என ஆதாரங்களோடு எழுதியிருந்தார்.

விஞ்ஞான வளர்ச்சி, ஊடக சாம்ராஜ்ஜியத்தின் வலிமை, தகவல் தொழில்நுட்ப பணி, என இன்றைக்கு எந்த கட்சியானாலும் எல்லா வசதிகளும் நிறைந்துள்ளது. கொள்கையில்லாத கோமாளி கூட்டங்கள் கூட கோட்டைக்கு போக கும்மாளமிடுங்காலம்.

பணத்தை போட்டு, பாட்டைக் கேட்கலாம் என்ற பகல் கனவு.

மோகனத்தில் தொடங்க நினைத்து, முகாரியில் முடியும் அவலம் என வரிசைப்படுத்தலாம்.

ஆனால் ஆரம்பத்தில் ஒரு இயக்கத்தின் கொள்கை, கோட்பாடு, லட்சியம், அன்றைய ஆளுங்கட்சியின் அதிகார துஷ்பிரயோக ஆணவப்போக்கு, ஏழைபடும் பாடு, விலைவாசி உயர்வு, தமிழ் மொழியின் வலிமை, வளமை இற்றையெல்லாம் எடுத்துரைக்க, பேரறிஞர் அண்ணா அவர்கள் மாலைநேரக் கல்லூரி வகுப்புகள் என்று குறிபிட்ட திமுகவின் பொதுக்கூட்டங்களே இவற்றையெல்லாம் பிரச்சாரம் என்ற ஒற்றைக் களமாக ஓங்கி ஒலித்தது.

40 ஆண்டுகளுக்கு முன்னர் (இந்த வரிகளை, வலிகளை தியாகப் பெருவேள்வியில், தீட்டிய வாளாக உருபெற்ற திராவிடப் பேரரசர் தலைவர் அவர்கள் நிச்சயம் ஏற்ப்பார்கள்)

வழக்கறிஞர்
வெ.அன்புவாணன்
கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர்

ஒன்று பட்ட செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ளடங்கிய, இன்றைய திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தைச் சார்ந்த எங்கள் ஆரணிப் பேரூரில் எனது தந்தை மறைந்த தலைமை இலக்கிய அணி துணைச் செயலாளர் கோ. வெற்றிவீரன் அவர்கள் ஆரம்பத்தில் அறிவகத்தில் பணி புரிந்ததாலும், அண்ணா, தலைவர் கலைஞர், பேராசிரியர் முரசொலி மாறன் போன்ற திராவிட ஆளுமைகளுடன் நெருங்கிய தொடர்பிலிருந்ததாலும் கழகத்தின் முன்னணி சொற்பொழிவாளர் பலரை அழைத்து வந்து, பொதுக்கூட்டங்கள் நடத்துவார்.

வெற்றிகொண்டான், ஆடலரசு, தஞ்சை கூத்தரசன், சிங்காரசடையப்பன், புலவர் சாமி நாகப்பன், கவிஞர் பொன்னிவளவன், காக்கா ராதாகிருஷ்ணன், ரகுமான் கான், என். வி. என் சோமு, கோடையிடி குமார், எஸ். பி. சற்குணம், புதுக்கோட்டை தமிழரசி எம் எல். சி, திருச்சி செல்லேந்திரன், வண்ணை ஸ்டெல்லா, வண்ணை தேவகி, நன்னிலம் நடராசன், காளிமுத்து, தீப்பொறி ஆறுமுகம், கோவை மு. ராமநாதன், கோவை. மணியன், விடுதலை விரும்பி, சீரணிசண்முகம், பலகுரலரசு முருகபாண்டியன், போலீஸ் கண்ணன், அண்ணா ஓர் காவியம் ராஜ்மோகன், என இன்னும் இன்னும் எத்தனையோ சொற்பொழிவாளரை கொள்கை முழக்கமிடச் செய்வார்.

இப்போது போல் அல்லாமல், பொதுக்கூட்ட சுவரொட்டிகள் (போஸ்டர்கள்)

அச்சடிக்கும் வசதிகள் உள்ளூரில் இருக்கவில்லை.

சென்னை 14.அண்ணாசாலை பி. ஆர் அன்ட் சன்ஸ் பக்கமாக ஒட்டிச் செல்லும் சுங்கு அக்ரகாரம் தெருவில் சென்றால், இரண்டு குறுக்குச்சாலைகளைக் கடந்தால், ஒரு பெரிய தபால் பெட்டி இருக்கும்.

அதற்கு பக்கத்தில் பாண்டுரங்கா லித்தோ பிரஸ், கணேஷ் லித்தோ இருக்கும். இங்கு தான் பொதுக்கூட்ட சுவரொட்டி ஆர்டர் தருவார். அதன் அளவே 30/40 (தர்டி பார்ட்டி ஒரு பிட்) இதை வாங்கி வர பள்ளி மேல் நிலை வகுப்பில் பயின்ற எனக்கு சென்னை சென்று வர அவர் தரும் கைச்செலவு ஐந்து ரூபாய்.

இவற்றிற்கெல்லாம் கண்கண்ட சாட்சிகள்; இன்றும் கழகத்தின் தொடர்பணியாற்றும் எங்கள் மாவட்ட அவைத்தலைவர் மு. பகலவன், முன்னாள் பேரூர் செயலாளர்கள் டி. கண்ணதாசன், ஜி. பி. வெங்கடேசன்

நினைத்துப் பார்த்தால் எவ்வளவு பெரும் காலகட்டங்களைக் கடந்து இந்த இயக்கம் வளர்ந்திருக்கிறது!

கொள்கையை பல வகைகளில், வலிகளில், வழிகளில் சொல்லி, மக்கள் மனங்களை வென்று, ஆளுங்கட்சி அந்தஸ்தை ஆறுமுறை அடைந்து, அவணி போற்றும் நல்லாட்சி தந்து, கடமை, கண்ணியம், கட்டுபாடு , எனும் திமுக மூன்றெழுத்து இயக்கத்தின் மூன்றாவது முதலமைச்சராகப் பெறுப்பேற்று, திராவிட மாடல் ஆட்சி புரியும் திராவிடப் பெருவேந்தர் தளபதியவர்கள் அழைக்கிறார்கள்.

தாயகத்து இளைஞர்களை!

மாயவலைகண்டு மயங்காமல், காகிதப்பூக்களையும், காவி ருத்ராட்ச கூடாரங்களை, நாடாமல், நாடு காக்கும் நல்லியக்கமாம் முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினராக!

ஜூன் 20 அன்று தமிழ்நாடு முழுவதும் துவக்கப்படும் நிகழ்வு, அலைகடலாய் பெருகிட, அகண்ட காவிரியாய் காட்சிதர சாட்சிகளாய் நின்று கடமையாற்றுவோம்!

தலைவரின் கட்டளையை நிறைவேற்றும்!

தமிழ்நாடு இளைஞர்களை ஒன்றிணைத்து வெல்வோம் 200 !

படைப்போம் புதிய வரலாறு!